1979 பிப்ரவரி 20]

உயர்நிலைப் பள்ளிகளில் ஒழுக்கக் கல்வி கற்பித்தல்.

*வினா எண் 106—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நமது மாநிலத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் ஒழுக்கக் கல்வி கற்பிக்க அரசிடம் தீவிர திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) & (ஆ) : பள்ளிகளில் அனைத்து வகுப்புகளிலும் வாரத்திற்கு ஒரு பிரிவேளை ஒழுக்கக் கல்விக்காக ஒதுக்கப் பட்டுள்ளது. ஒழுக்கக் கல்விக்காக தனிப் பாடத்திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது. ஒழுக்கக் கல்வியின் முக்கியத்துவம் அவ்வப் பொழுது பள்ளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பேருந்து ஓட்டுநர்கள், பேருந்து நடத்துநர்கள் ஆகியோர் அடங்கிய குழுவை அமைத்து, பள்ளி களில் ஒழுக்கக் கல்வி முறையை அமைக்க அரசு ஆலோசிக்குமா?

(முற்பகல் 9·30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஒழுக்கக் கல்வியைக் கற்பிக்கின்ற பொறுப்பு ஆசிரியர்களிடத்தில் தான் இருக்கிறது.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, ஒழுக்கக் கல்வியைக் கற்பிப்பதற்கு என்று தனிப் பிரிவு ஏற்படுத்தி இருப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அப்படி என்று சொன்னால் ஒழுக்கம் அற்ற கல்வியும் கற்பிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஒழுக்கக் கல்வி என்று சொல்லும்போது ஒழுக்கமற்ற கல்வியும் இருக்கிறது என்ற எண்ணத்திலே இந்தக் கேள்வி கேட்கப்படவில்லை. வளருகின்ற மாணவர்களுக்கு இத்தகைய ஒழுக்கக் கல்வியைத் தருவது சமூகத்தினுடைய கடமை என்கிற அடிப்படையிலேதான் இந்தக் கேள்வி கேட்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, ஒழுக்கக் கல்வி கற்பிக்கப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஒழுக்கம் என்பதற்கு எடுத்துக்காட்டாக என்ன நடைமுறை கடைபிடிக்கப்படுகிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1979 பிப்ரவரி 20

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, சமுதாயத்தில் ஒழுக்கம் என்று எவை எவை ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறதோ அவைகளைச் சொல்லித் தருவதுதான் இந்த ஒழுக்கக் கல்வி.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, ஒழுக்கக் கல்வி என்ற பெயரால் மூட நம்பிக்கையை வளர்க்கக்கூடிய சில அம்சங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகிறதே. அவற்றை நீக்கு வதற்கு அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசு மாணவர்களுக்கு ஒழுக்கத்தைதான் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறதே அல்லாமல் மூட நம்பிக்கையை சொல்லிக் கொடுக்க விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். லட்சுமிநாராயணன் : தலைவரவர்களே, ஒழுக்கக் கல்வித் தேர்விலே எடுக்கக்கூடிய மார்க்குகள், மாணவர்களுக்கு பிரமோஷன் கொடுக்கப்படும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படி உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, மாணவர்களுக்கு ஒழுக்கக் கல்வியைக் கற்பிக்கின்ற இந்த அடிப்படையிலே, ஹையர் செகன்டரி பள்ளிகளிலும் செமஸ்டர் முறையை இன்ட்ரட்யூஸ் செய்வதன் மூலமாக ஒழுக்கக் கல்வியைக் கற்பிப் பதற்கு அரசிடம் திட்டம் ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் செமஸ்டர் சிஸ்டம் கொண்டு வருகின்ற ஒரு பிரச்சினை இப்போது இல்லை. ஆனால் அந்த மாணவர் களுக்கும் ஒழுக்கக் கல்வியோடு, சமுதாயப் பொறுப்புகளையும், கடமைகளையும் உணர்த்துகின்ற கல்வியையும் தருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, ஒழுக்கக் கல்வி என்ற பெயரால், கடவுள் நம்பிக்கையைக் கொடுக்கின்ற கல்வி முறைகள் தனியார் பள்ளிகளிலே அமல் நடத்தப்படு கிறதே, இதை அரசு அறியுமா? எங்களைப் போன்ற நாத்திகக் கருத்துக்களைக் கொண்டவர்களது குழந்தைகளைக் கூட கடவுளை நம்பு என்று கட்டாயப் படுத்தக்கூடிய நிலைமைகள் இருக்கின்றதே. இவ்வாறு இருப்பது சரிதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, ஒழுக்கக் கல்வி கற்பிக்கப்படும்போது மதத் தலைவர்கள் சொல்லிய நல்ல கருத்துக்களைத்தான் உபயோகப்படுத்துகிறார்களே தவிர, மதத்தைப் பரப்புகின்ற அடிப்படையிலே அவ்வாறு செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்ட உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு பட்டதாரி ஆசிரியர்கள்.

* வினா எண் 107—திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மாவட்டத்தில் பட்டதாரி ஆசிரியர்கள் இல்லாத உயர்தர ஆரம்பப் பள்ளிகள் எத்தனை?

(ஆ) அப்பள்ளிகளில் உடனடியாக பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்;

(அ) 33

(ஆ) உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு புதிதாக பட்டதாரி தலைமை ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்துவது குறித்து இனி வரும் ஆண்டுகளில் நிதி நிலையில் அனுசரித்து அரசு ஆய்வு செய்யும். அவ்வாறு பதவிகள் ஏற்படுத்தப்பட்டால் நீலகிரி மாவட்டத்திலுள்ள உயர் தொடக்கப்பள்ளிகளுக்கும் உரிய பங்கு கிடைக்கும்.

திருப்பத்தூர் அரசினர் உயர்நிலைப்பள்ளி.

* வினா எண் 108—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரிலுள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளி நிர்வாகத்தை நகராட்சிக்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) எப்போது முதல் இத்திட்டம் அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) நிதி நிலையில் பின் தங்கிய நகராட்சிகளின்றும் அரசு எடுத்துக்கொண்ட 17 நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் திருப்பத்தூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளியும் ஒன்றாகும். அப் பதினேழு உயர்நிலைப் பள்ளிகளையும் அரசே நடத்த முடிவு செய்யப்பட்டு அவ்வாறே ஆணையிடப் பட்டுள்ளது. எனவே, அப்பள்ளிகளில் அரசு நிர்வாகத்தின்கீழ் இயங்கும்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.